# தொண்டரடிப்பொடியாழ்வார்

13

பூ. அ. பாஷ்யம் ஐயங்கார், பி. ஏ., எல். டி.
எழுதியது

சென்னை:
ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்
1925

ரிஜிஸ்தர் செய்தது]

[விலை 2 அணா

Printed at
The 'Caxton Press,'
Madras.

# பொருள் அடக்கம்


| எண் | விஷயம் | பக்கம் |
|---|---|---|
| 1. | விப்ரநாராயணரின் இளமைப் பருவம் | 1 |
| 2. | விப்ரநாராயணரின் விரக்திநிலை | 4 |
| 3. | திருநந்தவன கைங்கர்யம் | 6 |
| 4. | தேவதேவியின் ப்ரதிக்ஞை | 8 |
| 5. | தேவதேவியின் சூழ்ச்சி | 11 |
| 6. | தேவதேவியின் வெற்றி | 13 |
| 7. | தேவதேவியின் பிரிவும் ப்ராமணரின் வருத்தமும் | 16 |
| 8. | மாயோன் லீலை | 18 |
| 9. | கோயிலில் வட்டில் காணாமற்போதல் | 20 |
| 10. | ப்ராமணர் ராஜ தண்டனை அடைதல் | 21 |
| 11. | பிராட்டியின் கருணை | 25 |
| 12. | அரசன் ப்ராமணரை விடுவித்தல் | 27 |
| 13. | விப்ரநாராயணர் திருந்தி நலமடைதல் | 29 |

# தொண்டரடிப்பொடியாழ்வார்

## 1. விப்ரநாராயணரின் இளமைப் பர்வம்

முற்காலத்தில் தென் இந்தியாவில் மூன்று பெரிய ராஜ்யங்கள் செல்வத்திலும் நாகரிகத்திலும் கல்வியிலும் மிகவும் சிறப்படைந்திருந்தன. அவைகளை அரசாண்ட மன்னர் சேர, சோழ, பாண்டிய ரென்னும் மூன்று வம்சத்தவர்கள். அவர்களின் பராக்ரமத்தையும், அவர்கள் நடத்திவந்த அரசியற் சிறப்பையும் அக்காலத்தில் விளங்கிய அநேக கவிகள் சிறப்பாகக் கொண்டாடி யிருக்கிறார்கள்.

அம் மூன்று நாடுகளில் நீர்வள நிலவளங்களால் பெருமை யடைந்திருந்தது, சோழ நாடாகும். அந் நாட்டிலேதான் கல்வியும் பக்தியும் நிறைந்த சான்றோர் பலர் வஸித்து வந்தார்கள். அந் நாடு முழுவதும் அறச்சாலைகளும், வித்யாசாலைகளும், தேவாலயங்களும் நிறைந்திருந்தன. அந் நாட்டின் நகர்கள் கண்ணைப் பறிக்கும் அழகை யுடையனவாய்ப் பொலிவுபெற்றிருந்தன. அந் நகர்களின் உந்நதமான மாளிகைகளுடன் கூடிய வீதிகளும், அவற்றைச் சுற்றி இயற்கையாய் அமைந்துள்ள சோலைகளும்

வாவிகளும் கவிகளின் உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும் தன்மையனவா யிருந்தன.

அச் சோழ நாட்டிலே திருமண்டங்குடி* என்னும் பெயர் வாய்ந்த பட்டண மொன்று உண்டு. அதில் அறிவு நிறைந்த கல்விமான்களும், கடவுளிடத்திலும் அடியவ ரிடத்திலும் பக்தியோடு விளங்கிய சான்றோர்களும் நிறைந் திருந்தார்கள். அவ் வழகிய திருநகரிலே எல்லா வர்ணத் தாரும் தத்தம் கடமைகளை வழுவாது செய்துவந்தார்கள். ஜனங்கள் உள்ளதைக் கொண்டு த்ருப்தியோடும் ஸந்தோ ஷத்தோடும் காலம் கழித்துவந்தார்கள்.

திருமண்டங்குடியில் ஒரு வேதியர் வஸித்துவந்தார். அவர் வேதம் முதலிய அறநூல்களை நன்றாய் அறிந்தவர். வைதிக ஒழுக்கங்களிற் சிறிதும் பிறழாதவர். அவருக் குத் திருமாலிடத்தும் திருமாலடியார்களாகிய வைஷ்ணவ ரிடத்தும் விசேஷ பக்தி மிகுந்திருந்தது.

கருணைக் கடலான எம்பெருமான் அவ் வேதியரின் சீலத்தையும் பக்தியையும் கண்டுகளித்து அவருக்கு ஓர் அழகிய குழந்தையை அருள்புரிந்தார். பகவானது கடா க்ஷத்தாற் பிறந்த அக் குழந்தையின் வனப்பையும், முகக் காந்தியையுங் கண்டு அதிசயித்த பெற்றோர்கள் அதற்கு விப்ரநாராயணன் என்று பெயரிட்டார்கள். அக் குழந்தை ஜனித்த தினம் மஹா மஹிமையோடுங்கூடிய ஒரு சுப தினம். மாதங்களிற் சிறந்தது மார்கழி மாதம்; ஏனெனில் அது பகவானது அம்சமாகக் க்ருஷ்ண பரமாத்மா அருளிச் செய்த ஸ்ரீ கீதையில் சொல்லப்பட் டிருக்கிறது. அப்படிப் பெருமை வாய்ந்துள்ள மார்கழி மாதத்திலே கேட்டை நக்ஷத்ரங்கூடிய சுபதினத்திலே விப்ரநாரா யணர் அவதரித்தார்.

மகா விஷ்ணுவின் திருவாபரணங்களுள் வைஜயந்தி என்னும் பெயர் வாய்ந்த வநமாலை ஒன்று. விப்ரநாராயணர் அந்த வநமாலையின் அம்சமாகப் பூலோகத்தில் வந்து அவதரித்தார். அக் குழந்தையைப் பெற்றோர் சீராட்டிப் பெருமையோடும் வளர்த்து வந்தார்கள். அந்த ஸுந்தர குமாரருக்கு ஐந்து வயதாயிற்று. தந்தையார் தமது அருமைத் திருமகனை அறிவும் ஒழுக்கமும் நிறைந்த ஆசிரியரைத் தேடி அவரிடம் கல்வி பயிலும்படி ஒப்புவித்தார். ஏழாவது பிராயத்தில் விப்ரநாராயணருக்கு உபநயனச் சடங்கும் நிறைவேறியது. அப்பால் அவர் தம்மாசிரியரிடம் கற்கவேண்டிய அற நூல்கள் யாவற்றையுங் கற்று அவற்றில் வல்லவரானார். அக் குமரனைக் கண்டோர் யாவரும், "இவன் நற்குணக் குன்று; கல்விக் களஞ்சியம்; இவனைப்போலும் உலகிற் பிள்ளைகள் உண்டோ? இப் புத்ர ரத்னத்தைப் பெறுதற்குத் அவர் தாய்தந்தையர் என்ன நோன்பு நோற்றார்களோ!" என்று புகழ்ந்து கொண்டாடினார்கள். அடக்கம், விநயம், பொறுமை முதலிய ஸத்வ குணங்கள் அவரிடம் தலையெடுத்து விளங்கின. ஞானமும், பொறுமையும், குணமும், திறனும் ஒருங்கே அமைவது அருமை அருமை! என்று அதிசயிக்காதவர் கிடையாது. வேதங்களையும் மற்றுமுள்ள கலைகளையும் நன்றாய் உணர்ந்திருந்தார். அவர் பெற்றிருந்த ஞானமுதிர்ச்சிக்குத் தக்கபடி பகவானிடத்தும் பாகவதரிடத்தும் விசேஷ பக்தியுடையவராய் விளங்கினார்.

பரமபதத்தில் நித்யஸூரிகளோடு சிறப்புடன் வீற்றிருக்கும் எம்பெருமான் விப்ரநாராயணரை ஆட்கொள்ளத் திருவுளம் பற்றினார். தமது கணநாதரான ஸேனை முதலியாரைத் திருமண்டங்குடிக்குப்போய் விப்ரநாராயணருக்குத் திருவிலச்சினை தரிப்பித்து அவரை வைஷ்ணவராக்கி

அவருக்கு மந்த்ரார்த்தங்களை உபதேசித்து வரும்படி கட்டளையிட்டு அனுப்பினர். விஷ்வக்ஸேநரும் பரமபதநாதனுடைய திருவுளப்படியே திருமண்டங்குடிக் கெழுந்தருளி விப்ரநாராயணருக்குக் க்ருபையோடும் திருமந்த்ரத்தின் பொருளை உபதேசித்து மறைந்தார்.

## 2. விப்ரநாராயணரின் விரக்திநிலை

மஹா ஞானியாய்த் தம்மிலும் மிக்காரில்லை யெனும் பெருமை வாய்ந்த விப்ரநாராயணர் விவாஹப் பர்வத்தினை யடைந்தார். பெற்ரோர் தம் புதல்வருக்கு நற்குலத்தில் பிறந்த ஓர் அழகியை விவாஹம் முடித்துவைக்க நிச்சயித்தனர்.

பெற்ரோரின் உள்ளக் கருத்தை அறிந்த விப்ரநாராயணர் ஸமயம் நோக்கிக் காத்திருந்து தமது பிதா தனித்திருந்த காலத்தில் அங்குச் சென்று அவருடைய திருவடிகளில் பணிந்து நின்று வெகு விநயத்துடன் அடியில் வருமாறு விண்ணப்பித்துக்கொண்டார்:

'தந்தையே! உலகில் மக்கள் தமது மாதா பிதாக்களால் அடையும் நன்மைகளைவிடப் பன்மடங் கதிகமான நன்மைகளை நான் தேவரீரால் பெற்றிருக்கின்றேன். மனிதராய்ப் பிறந்தோர் விதிவிலக்குக்களை அறிந்து நற்கதி அடைதற்கு ஸாதனமா யுள்ளது கல்வியாகும். கல்வியில்லாதவன் பிறவிப்பயனை அடைதல் அரிது. தேடுதற்கரிய கல்விப்பொருளைக் கடவுளின் அருளாலும் நீங்கள் புரிந்த நல்லறத்தின் சிறப்பாலும் நான் பெற்றிருக்கிறேன். அக்கல்வியே எனக்கு உற்றதுணையாய் இருந்து நான் பகவானை வணங்கி நல்வழியில் நின்று முடிவில் அவனது திருவடிகளை அடைவதற்கு வேண்டிய நலம்

புரிவதாகும். தேவரீர் இப் பேருபகாரம் செய்ததற்கு நான் என்ன கைம்மாறு செய்ய வல்லேன்!

நான் சில நாளாய்க் கொண்டிருக்கும் விருப்பம் ஒன்றுண்டு. அதைத் தேவரீர் தயை புரிந்து ஈடேற்றி வைக்கவேண்டும். திவ்ய ஸ்தலங்கள்தோறும் யாத்ரை செய்து ஆங்காங்கு உள்ள எம்பெருமான்களை ஸேவிக்க விரும்புகிறேன். தேவரீர் அடியேனிடம் அருள்காட்டி அநுமதி அளித்தால் என் விருப்பம் நிறைவேறும்.'

இவ்வாறு தம்மை ப்ரார்த்தித்த மைந்தரைத் தந்தையார் அன்புடன் நோக்கி, 'உன் குணத்திற்கு ஏற்ற புத்தியே உனக்கு அமைந்திருத்தலைக் கண்டு மன மகிழ்ந்தேன். ஆயினும், நான் உனக்குச் சொல்வதைக் கேட்டு அப்படியே நடந்து கொண்டால் எங்களுக்கு ஸந்தோஷம் உண்டாகும். உன்னை எவ்வளவு அருமையாய் வளர்த்து வந்தோமென்பதை நீ அறிவையன்றோ? ஆகையால் நாங்கள் உன்னைப் பிரிந்து ஒரு நாளாயினும் உயிருடன் இருக்க ஸம்மதிக்க மாட்டோம். நீ இங்கிருந்தபடியே பரந்தாமனை வழிபடுவதற்கு வேண்டிய ஸௌகர்யங்களைச் செய்து வைக்கிறேன். குடும்பத்தில் இருந்துகொண்டு இல்லறங்களைச் செவ்வையாய்ச் செய்யவேண்டுமென்பதே இறைவனுடைய கட்டளையாகும். அதற்கு மீறி நடத்தல் சரியன்று. ஆதலால் உனக்கு இசைந்த ஸௌந்தரியை விவாஹம் செய்து கொண்டு, வீட்டில் இருந்தபடியே பகவானை ஆராதித்துவா. பகவானது அருளும் எளிதில் கைகூடும். இதற்காக நீ ஊரூராய் ஓடித்திரிந்து அலையவேண்டாம்' என்று கூறினர்.

விப்ரநாராயணருடைய மனமோ ஒரே நிலையில் நின்று விட்டது. அவருக்குள்ள மனவுறுதியைத் தேவர்களாலும் கலக்க முடியாது. அவர் விவாஹத்தை வெறுத்

தார். ஸம்ஸாரக் கடலில் அழுந்தியவன் அதன் கரையை அடைதல் அஸாத்யமென்று அவர் எண்ணினார். பகவானைத் தொழுது நலமடைதற்குக் குடும்பம் ஒரு பெருந் தடை என்று அறிந்தார். தன் இஷ்டப்படிக் கடவுளை த்யானிப்பதற்கு ப்ரதிகூலமா யிருக்கும் ஸம்ஸாரத்தில் சிக்கித் துன்பத்தை அநுபவிக்க அவர் விரும்பவில்லை. ஆகையால், அவர் தம் தந்தையாரிடம் தமது முடிவான தீர்மானத்தை வெளியிட்டு அவர் எவ்வளவு மன்றாடிப் பார்த்தும் கேளாமல் ஸ்ரீரங்கம் நோக்கிப் புறப்பட்டு விட்டார்.

## 3. திருநந்தவன கைங்கர்யம்

விப்ரநாராயணர் ஸ்ரீரங்க நாதரது அற்புத மூர்த்தத்தை மனத்தில் த்யானித்துக் கொண்டே சென்றார். அவரது உள்ளம் நிஷ்களங்கமாயிருந்தது. அரங்க நகர் சென்று அங்கு தாம் காணப்போகும் அருங்காட்சியை நினைந்து நினைந்து உள்ளுருகினார். ஸ்ரீரங்கம் சென்று அரவணையில் பள்ளிகொண்டு எழுந்தருளியிருக்கும் அழகிய மணவாளரை ஸேவிக்கும் பாக்யம் தமக்குக் கிடைத்ததற்காக அவர் களிப்படைந்தார்.

மறையவர் அத் திவ்யத் திருநகரை அடைந்தார். முறைப்படிசென்று கோயிலுட்புகுந்து ஸந்நிதி அடைந்து ஸாஷ்டாங்கமாகத் தண்டனிட்டு வணங்கி நின்றார். திருவநந்தாழ்வான்மீது எம்பெருமான் பிராட்டி ஸமேதராய் வெகு சிறப்புடன் வீற்றிருக்கும் திவ்யமங்கள விக்ரஹத்தின் திருக்கோலத்தைக் கண்ணாரக் கண்டு ஸேவித்தார். அவரது இரண்டு கண்களினின்றும் ஆநந்த வருவி சொரிந்தது. அவரது மெய் சிலிர்த்தது. ரோமம் புள

கித்தது. நம்பெருமாளை ஸேவித்து மெய்ம்மறந்து நின்ற வேதியர், அப் பெருமானைத் துதித்து ஆநந்தக் கடலில் ஆழ்ந்திருந்தார். ஸ்ரீரங்கநாதனும் விப்ரநாராயணரைக் குளிர நோக்கி அருள் புரிந்தார்.

அதுமுதல் விப்ரநாராயணர் ஸ்ரீரங்கத்திலேயே வாஸம் செய்யத் தொடங்கினர். எல்லாப் பாபங்களையும் போக்கும் மஹிமை வாய்ந்த திவ்ய ஸ்தலமன்றோ ஸ்ரீரங்கம்? விப்ரநாராயணருக்கு அழகிய மணவாளரிடத்தில் அளவு கடந்த பக்தி உண்டாயிற்று ; அதனால் தான் அவர் எம் பெருமானுக்குத் தகுந்த திருப்பணி செய்துகொண்டு அவ்விடத்திலேயே வாஸஞ்செய்யத் தீர்மானித்தார்.

கடவுளுக்கு உகப்பான பணி யாதென்று ஆராய்ந்தார். முன்னம் கஜேந்த்ரர் செய்துவந்த புஷ்ப கைங்கர்யத்திற்கு உகந்து அவரைப் பகவான் பெரிய ஆபத்தினின்றும் காத்து நற்பதம் அளித்ததையும், ஸ்ரீவில்லிபுத்தூரில் துளஸீ கைங்கர்யம் செய்து வந்த பெரியாழ்வாருக்கு மஹாவிஷ்ணு அருள்புரிந்ததையும், தினந்தோறும் புஷ்பம் கொண்டு வந்து ஸமர்ப்பித்த ஸ்ரீமாலாகாரருக்கு க்ருஷ்ணன் காட்டிய கருணைத்திறத்தையும் விப்ரநாராயணர் நினைத்துத் தாமும் அப்படியே செய்து திருமாலின் க்ருபையைப் பெறத் தீர்மானித்தார். உடனே அத்திருப்பதியிலேயே அவர் ஒரு நந்தவனம் அமைத்து அதில் பல வகைப் புஷ்பச் செடிகள் வைத்து வளர்க்க ஆரம்பித்தார். மிகுந்த சிரத்தையோடு வேலை தவறாமல் நீர்ப்பாய்ச்சிக் களையெடுத்துச் செடிகளைப் பூச்சிகள் பாழாக்காமல் இரவும் பகலும் ஓயாமல் காத்துவந்தார். ப்ரதிதினமும் மலரும் பூக்களை அழகாகக் கட்டி மாலையாக்கிக் கொண்டுபோய் ஸ்ரீரங்கநாதனுக்கு ஸமர்ப்பித்து ஸேவித்து வருவார்.

சிறுவர்களே? நீங்களும் விப்ரநாராயணரைப் போல் உங்கள் வீட்டுத் தோட்டங்களில் துளஸீ, ரோஜா முதலிய புஷ்பச்செடிகளை வைத்து வளர்த்து மலரும் மலர்களைக் கடவுளுக்குச் சூட்டினால் கடவுளின் திருவருள் உங்களுக்கும் உண்டாகும். அதனால் உங்களுக்கு நல்லறிவு வளரும்; உங்களுடைய கல்வி செழிக்கும்; லக்ஷ்மியின் அருட்பார்வை கூடும். திரண்டசெல்வமும் நீண்டஆயுளும் பெற்று இன்பமாய் வாழ்வீர்கள். பகவானுக்கு நாம் செய்யக்கூடிய பணிகளிற் சிறந்தது இப் பணியல்லவா! அதனால் நாம்பெறக்கூடாத நன்மையும்உண்டோ? மலர்ந்த புஷ்பங்களைக் காணும்போது நமக்கு எவ்வளவு இன்பம் உண்டாகிறது? அவைகளினின்றும் வீசும் வாஸனையை நாம் எப்போதும் முகர்ந்து அநுபவிக்க விரும்புகிறோமல்லவா! கடவுளுக்கும் புஷ்பங்களிடத்தில் வெகு ப்ரியமுண்டு. எவன் ஸந்தோஷமாய்ப் பக்தியுடன் தமது திருவடிகளில் புஷ்பங்களைக் கொண்டுவந்து ஸமர்ப்பிக்கிறானோ அவனிடத்தில் பகவானுக்கு அருள் உதிக்கும். அவர் நம்மிடமிருந்து பணமாவது சொத்தாவது விரும்பவில்லை. சுத்தமான மனத்தையும், மலராலும் நீராலும் புரியும் அர்ச்சனையையுமே அவர் பெரிதாக மதிக்கிறார். ஆகையால் இத்தொண்டினும் மேம்பட்ட திருத்தொண்டு வேறுஇல்லை.

## 4. தேவதேவியின் ப்ரதிக்ஞை

*விப்ரநாராயணர் தமது கைங்கர்யத்திலேயே கருத்துடையவராய்ச் சோலையை வெகு ஜாக்ரதையோடுங் காத்து வந்தார். அச் சோலையின் சிறப்பை சோழ ராஜன் முதல் யாவரும் அறிந்து அவருடைய பக்தியைக் கண்டு அதிசயித்தார்கள்.*

இப்படி இருக்கையில் திருக்கரம்பனூர் என்னும் ஸ்தலத்தில் ஒரு வேசி இருந்தாள். அவளுக்குத் தேவ தேவி என்று பெயர். அவள் வெகு ரூபவதி. அவளுடைய அழகைக் கண்டு சோழ ராஜன் மயங்கி யிருந்தான். தேவ தேவி ஒரு நாள் உறையூருக்குச் சென்று சோழ மன்னனிடம் தனக்கு வேண்டிய த்ரவ்யங்களும் ஆடையாபரணங்களும் பெற்று அவனிடம் விடைபெற்றுக்கொண்டு திருக்கரம்பனூருக்குத் திரும்பினாள்.

தேவ தேவி தன் தோழியருடன் திரும்பி வந்து கொண்டிருக்கையில் அவளும் ஸகிகளும் வெயிலின் கடுமை ஸஹிக்க முடியாமல் வருந்திக் களைப்புற்றனர். விப்ரநாராயணருடைய சோலை வழியில் இருப்பதை அறிந்த தேவ தேவி தன் தோழிகளுடன் அச் சோலைக்கு வந்து சேர்ந்தாள்.

அச் சிங்காரத் தோட்டத்தைக் கண்டதும் அவளுக்கு உண்டான ஆச்சர்யத்தைச் சொல்லி முடியாது. அவள் தன் ஸகிகளை நோக்கி, "ஸஹோதரிகளே, நான் பெண்ணாய்ப் பிறந்தது முதல் இவ்வளவு நேர்த்தியான பூம்பொழிலைக் கண்டதேயில்லை. இந்த்ரனது கற்பகச் சோலையும் இதற்கு ஸமான மாகாது. நமக்குள்ள சிரமம் முழுவதும் இதில் கால் எடுத்து வைத்ததும் மாயமாய்ப் பறந்து விட்டதே! எத்தனைவகைப் பழமரங்கள்! புஷ்ப ஜாதிகள் எத்தனை! அவை வைக்கப்பட்டிருக்கும் ஒழுங்கையும் அழகை என்னென்று சொல்வது! இவ்வளவு ரமணீயமான தோட்டத்தைக் காத்து வளர்ப்பது எவ்வளவு அருமையான கார்யம்! நாம் இதில் சற்று நேரம் உலாவியிருந்து சிரமம் தீர்ந்தபின் புறப்படுவோம்' என்று சொல்லி, எல்லாரையும் அழைத்துக் கொண்டே தோட்டத்திற்குள் நுழைந்தாள்.

ப்ராமணர் காஷாயம் தரித்துத் தேகமுழுதும் பன்னிரண்டு திருமண்காப்பும் விளங்கத் தம் கார்யத்திலேயே கண்ணுடையவராய், ஒருபுறத்தில் செடிகளுக்குத் தண்ணீர் பாய்ச்சிக்கொண்டும் மண்ணைக் கொத்திக்கொண்டும் இருந்தார். அவர் பகவானுடைய நாமங்களை உச்சரித்துக் கொண்டே தம்முடைய வேலையைக் கவனித்துக்கொண்டிருந்தார். தேவதேவி அத்தோட்டம் முழுவதும் சுற்றிக் கொண்டே வந்து விப்ரநாராயணர் ஜலம் பாய்ச்சிக்கொண்டிருந்த இடத்தில் தன் தோழிகளுடன் வந்துநின்றாள்.

தேவதேவி ப்ராமணரின் ஸாத்விகவேஷத்தைக்கண்டு ஆச்சர்யப்பட்டுத் தன் தமக்கையை நோக்கி, "ஸஹோதரியே! இந்தப் பார்ப்பானின் செருக்கை என்னென்று சொல்வது? என்னுடைய அழகைக்கண்டு மன்னாதிமன்னர்களும் என்னிடம் மயங்கிக்கிடக்கிறார்களே! அப்படியிருக்க, நான் இவர் எதிரில் நின்றிருந்தும் என்னைக் கண்ணெடுத்தும் பாராமல் இருக்கிறாரே! இவருக்கு என்னிடம் இவ்வளவு அலக்ஷ்யமா? இவரை எப்படியாவது நான் வசப்படுத்தாமல் விடுவதில்லை" என்று கூறினாள்.

மூத்தவள் தேவதேவியின் வார்த்தைகளைக் கேட்டு உடல் குலுங்க நகைத்து, "தேவதேவி! அவரை யாரென்று நினைத்தாய்? அப் பாகவதரிடம் உன் ஸாமர்த்யம் சிறிதும் செல்லாது. வீண் ஆசையை விடு. அவரைக் கெடுக்க முயல்வதும் மஹாபாபமாம். அவருடைய ப்ரதாபமானது ஊர்முழுதும் பரவி யிருக்கிறது. அவர் பெரிய துறவி. அந்த ஸாத்விக வேதியரை நீ நெருங்கினால் அழிவது திண்ணம்" என்று கூறினாள்.

தேவதேவிக்குத் தன்னைப்போல் அழகிகள் உலகில் கிடையாதென்ற மமதை மிகுதியும் உண்டு. தன்வலையில்

சிக்காத ஆடவரும் உண்டோ என்று நினைத்து அவள் மிகவும் இறுமாந்திருந்தாள். தமக்கையின் மொழிகளைக் கேட்டதும் அவளுக்குக் கோபம் பொங்கிற்று. கண்களில் தீப்பொறி பறக்கத் தேவதேவி தன் ஸஹோதரியை நோக்கி, "இதோபார்! நான் இவனை அடிமையாக்கி விடுகிறேன். அவனை மயக்கி என் வசப்படுத்தி விட்டால் நீ எனக்கு ஆறுமாதகாலம் அடிமையாயிருந்து உழைக்க உடம்படுகிறாயா?" என்றாள்.

மூத்தவளும் ப்ராமணருடைய மஹிமையை அறிந்தவ ளாகையாலே தேவதேவியின் வார்த்தைக்குக் கட்டுப் பட்டு அவளை நோக்கி, "நீ உன் முயற்சியில் தவறினால் எனக்கு ஆறுமாதகாலம் அடிமையாக வேண்டும்" என்று கூறினாள். தேவதேவியும் அவ்வாறே செய்ய உடம்பட்டாள்.

## 5. தேவதேவியின் சூழ்ச்சி

தேவதேவி மகா கெட்டிக்காரி. தான் ஒன்றைச் செய்ய நினைத்தால் அதைச்சாதியாமல் விடமாட்டாள். பெண்ணாய் இருந்தும் அவளுக்குத் துணிவும் தைர்யமும் மிகுதியும் உண்டு. எப்படியாவது விப்ரநாராயணரின் தூயமனத்தைக் கெடுக்கக் கங்கணம் கட்டிக்கொண்டாள்.

அவள் தன் ஸஹோதரி முதலியவர்களை விடை கொடுத் தனுப்பிவிட்டாள். தன் நகைகளையும் பட்டாடைகளையும் களைந்து தன் ஸகிகளிடத்தில் கொடுத்தனுப்பி விட்டுத் தேவ தேவி காஷாயந் தோய்த்த சேலையொன்றைக் கட்டிக் கொண்டு விப்ரநாராயணர் பக்கத்தில் போய் நின்றாள். அப்போதும் அவர் அவளைக் கண்ணெடுத்துப் பார்க்கவில்லை. "இந்தப் பூனையும் பாலைக் குடிக்குமா" என்பது

போல் தேவதேவி வேஷம் போட ஆரம்பித்தாள். அவள் ஒரு தவமடந்தை போல் நடந்து கொண்டாள். ஸதா பகவானது நாமங்களையே அவளுடையவாய் உச்சரித்துக்கொண்டிருக்கும். விப்ரநாராயணர் படுக்கையை விட்டு எழுந்திருப்பதற்கு முன்னமே அவள் எழுந்திருப்பாள். உடனே அவள் அத் தோட்டத்திலிருந்த செடி கொடிகளைப்பார்த்து அவற்றிற்குத் தண்ணீர் பாய்ச்சுவாள். விப்ரநாராயணரைக் கண்டபோது தூரத்தில் நின்றபடியே அவரை வணங்கி நமஸ்கரிப்பாள். அவர் ஏவாமலே அவருக்குச் செய்யக்கூடிய பணிகளைச் செய்வாள். அவளே அச்செடிகளை ஆராய்ந்து, மலர்களைக்கொய்து அழகிய மாலைகளாய்க்கட்டி அவர் நடமாடும் இடத்தில் வைத்துவிடுவாள்.

இப்படிச் சில தினங்கள் கழிந்தன. மறையவர் அம் மாதின் குணங்களைக்கண்டு வியந்து அவளை ஒருநாள் அழைத்து, 'நீ யார்? நீ இங்கிருப்பதற்குக் காரணம் என்ன?' என்று வினவினர்.

தேவதேவி வெகு மர்யாதையோடும் விப்ரரை நோக்கி, "ஸ்வாமி! அடியேன் முன் ஜன்மத்தில் செய்தபாபத்தால் மஹா இழிவான குலத்தில் பிறந்தேன். தாஸிக் குலத்தில் பிறந்த என்னை என் பெற்றோர் என் குலத்தொழிலை நானும் கைக்கொள்ள வேண்டும் என்று நிர்ப்பந்தித்தார்கள். என்மனமோ அவ்விழிவான கார்யத்தில் சிறிதும் செல்லவில்லை. உலகத்தாரை ஏமாற்றிப் பிழைக்க நான் விரும்பவில்லை. தேவரீரைப்போன்ற மஹான்களை அடுத்துக் கைங்கர்யம் புரிந்து கடைத்தேறலா மென்று விரும்புகிறேன். நான் கதியற்றவள். எப்படியாவது நற்கதி அடைய வேண்டு மென்னும் எண்ணம் மாத்ரம் எனக்கு உண்டு. இவ்வேழை மீது தேவரீர் அருள் புரிந்தால் அடியாள் உய்வதற்கு வழியுண்டு. இன்றேல், நான் இறத்தலே மேல்.

பெரியோர்களையடைந்து அவருக்குத் தொண்டு புரிதற் கன்றி இத்தேஹம் எதற்கு ஏற்பட்டிருக்கிறது? ஆகையால் எனக்குத் தத்வோபதேசம் செய்து நான் உய்யும்வகையை அருள்புரியவேண்டும். தேவரீரிடும் பணிகளைச் சிரஸா வகித்துச் சிரத்தையோடு அவற்றைச் செய்து, தேவரீர் உண்டு எறிந்த மிச்சத்தைத் தின்று நற்கதி அடைய விரும்புகிறேன்'' என்று கூறினாள்.

அவளுடைய கபட எண்ணங்களைச் சிறிதும் அறியாத விப்ரநாராயணர், அவளுரையை மெய்யென நம்பி, அவளு டைய பக்தியையும் விரக்தியையும் புகழ்ந்து கொண்டாடி அவளை நோக்கி, "பெண்ணே! உன் எண்ணம் அது வாயின், நீ இச்சோலையில் இருப்பதற்கு எனக்குச் சிறிது ஆக்ஷேபம் இல்லை. இதுவரை செய்து வந்ததுபோல் நம் பெருமாளுக்குப் பூத்தொண்டு செய்யும்விஷயத்தில் எனக்கு உன்னால் இயன்ற உதவியைச் செய்து வரலாம்'' என்று நியமித்தார். தேவதேவியும் தன் எண்ணம் ஈடேறும் நாள் குறுகியதென்று களித்து ஸமயம் நோக்கியிருந் தாள். அவள் முன் போலவே மறையவர்க்குத் திருத் தொண்டுகள் புரிந்து அவரை ஸந்தோஷப்படுத்தி வந் தாள். ஸ்ரீரங்க நாதனுக்குப் புஷ்ப கைங்கர்யம் முன் னிலும் வெகு சிறப்பாக நடந்து வந்தது.

## 6. தேவதேவியின் வெற்றி

இங்ஙனம் பல மாதங்கள் சென்றன. வர்ஷாகாலங் குறுகியது. ஒரு நாள் ஆகாயமுழுதும் மேகங்கள் குமுமிப் பேரிடியையும் மின்னலையும் உண்டாக்கிச் சற்று நேரத்துக்குள் பெருமழையாகப் பெய்யத் தொடங்கின. எங்கும் இருள்கவிந்தது. கடுமழைக் கஞ்சி எல்லாவுயிர் களும் ஓடியொளித்தன.

விப்ரநாராயணர் அன்றிரவு வழக்கம்போல் தமது பர்ணசாலையில் படுத்து உறங்கினார். தேவதேவி வெளியிலேயே சோலையில் ஒரு புறத்தில் படுத்திருந்தாள். அன்றிரவு பெய்த மழையின் கடுமையைக்கண்டு விப்ரநாராயணர் தேவதேவியின் எளிய நிலைக்கு வருந்தினார். அவர் இயற்கையிலேயே எல்லா உயிர்களிடத்தும் கருணையும் இரக்கமுங் கூடியவர். பிறர் வருந்துவதைப் பார்க்க அவர்மனம் சஹியாது. ஆகையால் அவர் பர்ணசாலைக்கு வெளியே வந்து தேவதேவியைக் கூப்பிட்டு, அப்பர்ணசாலையில் ஒரு பக்கமாய் இருக்கும்படி அவளுக்கு உத்தரவு கொடுத்தார். அவள் மழையில் நனையாதிருக்க வேண்டுமென்னும் எண்ணத்தால், அவர் அவளுக்கு அப்பர்ணசாலையில் இடங்கொடுத்தார்.

வஞ்சகியான தேவதேவி அவருடைய மனத்தைக் கலைக்க அது தகுந்த ஸமயமென்று உணர்ந்தாள். உண்ட வீட்டுக்கு த்ரோஹம் நினைத்தல் பாபிகளின் செயல். பாம்புக்குப் பால் வார்த்து வளர்த்தால் அது என்றைக்காவது தன் இயற்கைக் குணத்தைக் காட்டாமல் இராது. பெண்களைப்போல் உறவாடிக் கெடுப்போர் உலகில் ஒருவரும் கிடையாது. தேவதேவி விப்ரநாராயணரின் நியமனம் பெற்று உள்ளே சென்றதும் தன் அற்பகுணத்தைக் காட்டத் தொடங்கினாள். அவள் தன் உரை நயத்தால் மறையவரின் உள்ளத்தைக் கரைத்து விட்டாள். அவளுடைய மொழிகளைக் கேட்டு அவளழகைக் கண்டபின் அவரது மனமும் கலங்கியது. உடனே அவருடைய சீலம் அவரை விட்டு அகன்றது.

தேவதேவி அகமகிழ்ந்து தான் மறைத்து வைத்திருந்த ஆடையாபரணங்களை எடுத்துத்தரித்துக்கொண்டு விப்ரநாராயணர் முன்னிலையில் நின்று தன் ஆசை

மொழிகளால் அவருடைய உள்ளத்தைக் கவர்ந்தாள். பெண் வலைப்பட்டோர்க்கு அறிவு மழுங்கு மன்றோ? அவரும் தம் நிலையை மறந்து தேவதேவியோடு மகிழ்ந் திருந்தார். அதுமுதல் அவருடைய சீலமும் ஒழுக்கமும் குறைந்து கொண்டே வந்தன. அவருடைய தவநெறியுங் குலைந்தது. அவர் தாம் செய்துவந்த திருத்தொண்டை யும் மறந்தார். அவர் தேவதேவியின் காதல் வெள்ளத்தில் மூழ்கித் திளைத்தார். தேவதேவியும் தன் சபதம் நிறைவேறிய தென்று மனங்களித்தாள்.

அறிவு நிறைந்த பக்தர்களின் மனமும் நாளடைவில் மாறித் தீயவழியிற் செல்லுதல் கூடும் என்பதற்கு, விப்ர நாராயணரின் சரித்ரமே ஒரு த்ருஷ்டாந்தமாகும். நம் முடைய மனத்தை ஒரு நிலையில் நிறுத்துவது மிகவுங் கஷ்டம். பாபச் செய்கைகளைப் பின்பற்றிக் கேடுறுவது எளிது. நற்கருமங்களைக்கொண்டு மேன்மையடைதல் அரிது. ஆகையால், நாம் இயன்றவரை தீக்குணமுடை யோரின் உறவையும் தீய விஷயங்களில் உண்டாகக் கூடிய விருப்பத்தையும் விலக்கவேண்டும். தீயோரின் இணக்கம் எளிதிற் கூடும். கூடியபின் அதனால் அடை வது தீமையே அன்றி வேறன்று. ஒருவன் நாசம் அடை வதற்கு முக்ய காரணம் துர்ஜன ஸஹவாஸமேயாம். நல்ல வர்களுடைய நட்புப் பெறுவது மிகவும் அருமை. அரி திற் கூடும் நல்லோரின் உறவு திடப்பட்டால், பின்னால் ஒருவன் பெறற்கரும் நன்மைகளை அடைந்து சிறப்படை வான். ஆகையால்தான் இணக்கமறிந் திணங்கவேண்டு மென்று ஆன்றோர் கூறுவர். நல்லோரைக் கூடி ஒருவன் அடையக்கூடிய நன்மையையும், தீயோரைச் சேர்ந்து ஒருவன் அடையும் கேட்டையும் நோக்கியே,

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார்சொற் கேட்பதுவும் நன்றே - நல்லார்
குணங்க ளுரைப்பதுவும் நன்றே அவரோடு
இணங்கி யிருப்பதுவும் நன்று.

தீயாரைக் காண்பதுவுந் தீதே திருவற்ற
தீயார்சொற் கேட்பதுவுந் தீதே - தீயார்
குணங்க ளுரைப்பதுவுந் தீதே அவரோடு
இணங்கி யிருப்பதுவுந் தீது.

என்று பெரியோரும் கூறி யிருக்கிறார்கள். தொண்டர்களுட் சிறந்த விப்ரநாராயணரே துர்ஜன ஸஹவாஸத்தால் மதி இழந்தாரென்றால், நம்மைப்போன்ற ஸாதாரண மனிதர்களின் நிலையைப்பற்றிக் கேட்பானேன்? ஸஹவாஸ தோஷம் பொல்லாதென்று நமக்கு அறிவுறுத்த வேண்டியே, பகவான் மஹா விரக்தரான விப்ரநாராயணரும் தேவதேவியை விரும்பும்படி ஸங்கல்பித்தார்.

## 7. தேவதேவியின் பிரிவும் ப்ராமணரின் வருத்தமும்

தேவதேவி ப்ராமணரோடு சில காலம் ஸுகித்திருந்தாள். அவர் தாம் அரிதில் தேடிய பொருள்களை யெல்லாம் அவளுக்கு ஒப்புவித்துவிட்டு அவளுடைய காதலில் மயங்கிக் கிடந்தார். அவர்கையில் பொருள் அபரிமிதமாயிருந்த வரையில் தேவதேவி அவரை விட்டு அகலாமல் அவருக்கு உண்மையில் பாடுபடுபவள்போல் நடித்து வந்தாள். பெண்களுக்கிட்ட பொன், அன்றே அழியுமன்றோ? அவருடைய கைப் பொருளும் வெகு சீக்ரத்தில் கரைந்துவிட்டது.

அதுமுதல் வேசையின் அன்புங் குறைந்தது. அவள் அவரைக் கீழ்மைப்படுத்தத் தொடங்கினாள். அவரிடம்

அவளுக்கிருந்த மதிப்பும் நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வந்தது, கைப்பொருளில்லாதவனை இவ்வுலகில் ஒருவரும் மதியாரன்றோ?

'கல்லானே யானாலுங் கைப்பொருளொன் றுண்டாயி
னெல்லாருஞ் சென்றங் கெதிர்கொள்வ் — ரில்லானை
யில்லாளும் வேண்டாண்மற் றீன்றெடுத்த தாய்வேண்டாள்
செல்லா தவன்வாயிற் சொல்'

என்று சான்றோர் கூறியிருப்பதும் இது பற்றியேயன்றோ?

கடைசியில் அவரிடமுள்ள சொத்து முழுதும் தன் கைக்குச் சேர்ந்தபின் அவள் அவரைப் புறக்கணித்துப் போய் விட்டாள். விப்ரநாராயணருக்கோ அவளைப் பற்றிய ஏக்கம் நீங்கவில்லை. அவர் அது முதல் பித்தர் போல் ஆனார். ஊணையும் மறந்தார். அவர் அவளில்லஞ் சேர்ந்து அவ் வீட்டுத்திண்ணையில் இராப்பகல் ஓயாது காத்துக்கிடந்தார். ஆனால் அவ்விலைமகளோ அவரைக் கண்ணெடுத்தும் பார்க்கவில்லை.

என் செய்வார் பாபம்! பெண்களின் மனமோ கல்லைப்போற் கடினமானது. விப்ரநாராயணர் அவளை எவ்வளவு கெஞ்சிக் கூப்பிட்டும் அவள் அவரை லக்ஷியஞ்செய்யவேயில்லை. பணமிருந்தால் வெகு ப்ரீதியுடையவள்போல் பாசாங்கு செய்வாள். ப்ராமணருக்கு இப்போதேனும் நல்லறிவு வந்ததோ? அவருக்கிருந்த அஞ்ஞானம் அவரை உண்மை அறியவொட்டாமல் தடுத்தது. அவர் அவள் வீட்டுத் தெருவிலேயே காத்துக்கிடந்தார். அவருக்கிருந்த வருத்தம் இவ்வளவென்று சொல்லி முடியாது. அவருடைய தேகம் இளைத்துத் துரும்புபோல் வாடியது.

## 8. மாயோன் லீலை

இப்படியிருக்கையில் ஒருநாள் பகவான் லக்ஷ்மி ஸமேதராய்த் தேவதேவியின் வீட்டு வீதிவழியே ஆகாயத்தில் கருடவாஹனத்தில் எழுந்தருளினர்.

பிராட்டியார் தமது நாயகனை நோக்கி, "ஸ்வாமி, அவ் வீட்டு வாயிலில் நிற்பவன் யாவன் ? அவன் முகம் வாட்டமுற்றிருப்பதற்குக் காரணமென்ன ? அவனது சோகத்தைப் போக்குவது எப்படி ?" என்று வினவினர்.

அருட்கடலாகிய பரமபதநாதன், "அவனுக்கு விப்ரநாராயணன் என்று பெயர். அவன் பஹுகாலம் நமக்குத் தொண்டுசெய்து பரம பாகவதனாய் விளங்கினான். ஆனால் இப்போதோ அவன் நம்மை முற்றும் மறந்து வினைவழி நிற்கின்றான். அவ் வீட்டுக்காரியான வேசியிடம் காதல் கொண்டு அவளே கதியென்று தெருவாயிலைக் காத்துக் கிடக்கிறான். அவனது மதியும் விதிவழி சென்று மயங்கிக் கிடக்கிறது. அவள் அவனை வெறுத்துத் தள்ளியும் அதை விட்டு அகன்று செல்ல மனமில்லாதவனாயிருக்கிறான்" என்று விடையளித்தார்.

இவ்வுரை கேட்டு லக்ஷ்மியாரும் பரிதபித்து மீண்டும் மாயவனை நோக்கி, "ஸ்வாமி ! நமக்குப் பக்தியுடன் தொண்டு செய்துவந்த அப்பாகவதரைத் துன்பத்துக்குள்ளாக்குவது அழகன்று. இதுவரை சோதித்ததே போதுமானது. இனி அவரைத் தேவரீரின் மாயைக்கிலக் காக்க வேண்டாம். அவரைத் தடுத்தாட்கொள்வதே தகுதியாகும்" என்று வேண்டினாள்.

திருமால் தமது தேவியாரின் கருத்துக்கிசைந்து விப்ரநாராயணரைத் திருத்தி யாட்கொண்டருள நிச்ச

பித்தார். உடனே மனிதவேஷம் பூண்டு தமது திருக் கோயிற் பாத்திரங்களில் ஒன்றை எடுத்துக்கொண்டு கடுகி நடந்தார். வேசியின் இல்லங்குறுகிக் கதவைத் திறக்கும் படி வேண்டினார்.

தேவதேவி உள்ளே யிருந்தபடியே, "நீயார்?" என்று வினவினாள்.

உடனே பெருமாள், "என் பெயர் அழகிய மணவாள தாஸன். என்னை விப்ரநாராயணர் உன்னிடம் அனுப்பி னார். உனக்குக் கொடுத்து விட்டு வரும்படி என்னிடம் பொற்பாத்திர மொன்றைக் கொடுத்திருக்கிறார். அதனைப் பெற்றுக்கொள்" என்று விடை பகர்ந்தார்.

பொருள் என்றவுடன் அப்பரத்தையின் சுளித்த முகம் களித்தது. பணத்தைப் பற்றியே மனிதருடன் உறவாடும் வஞ்சகியாகிய தேவதேவி முகமலர்ச்சியுடன் விரைந்து வந்து கதவைத் திறந்தாள். அவள் பொற் பாத்திரத்தைப் பெற்றுக்கொண்டு வந்த மனிதரைப் பார்த்து, "நீர் சென்று உடனே இங்கே வரும்படி நான் விப்ரநாராயணரை வேண்டியதாகச் சொல்லும். அவர் விரைவில் வரட்டும்" என்று கூறி அனுப்பினாள்.

பெருமாளும் அங்ஙனமே சென்று விப்ரநாராயணரை நோக்கி, 'நான் தேவதேவியால் உம்மிடம் அனுப்பப்பெற்ற ஸேவகன். அவள் உம்மை உடனே புறப்பட்டு வரும்படி விரும்புகிறாள். இச் செய்தியை உமக்கு அறிவிக்க நான் இங்கு வந்தேன்" என்றார்.

அதைக்கேட்டு அந்தணரும் அதிக ஸந்தோஷங் கொண்டார். உடனே வேசியின் இல்லம் அடைந்தார்.

அவள் அவரை ப்ரீதியுடன் வரவேற்று உபசரித்தாள். அன்றிரவு விப்ரநாராயணர் அவளுடைய காதல் வெள்ளத்தில் மூழ்கிக் கிடந்தார்.

## 9. கோயிலில் வட்டில் காணமற்போதல்

பொழுது விடிந்தது. வழக்கம் போல் பூஜைக்கு முன் கோயிற் கதவைத்திறந்த காரியஸ்தர்கள் ஸ்வாமியின் வட்டிலைக் காணாது திடுக்கிட்டனர். எங்குத் தேடியும் கிடைக்கவில்லை. பூஜைசெய்யும் அர்ச்சகர் முதலியோர் "நாம் அறியோம்" என்று கூறிவிட்டனர்.

உடனே அவ்விஷயம் அரசன் செவிகளுக்கெட்டியது. அரசனும் கடுஞ்சினங் கொண்டு தன் அரண்மனைக் காவலரிற் சிலரை அனுப்பிக் களவைக் கண்டு பிடிக்கும்படி கட்டளையிட்டான். அவர்கள் தம்மாலியன்றவரை முயன்றும் புலனொன்றும் வெளியாகவில்லை. அவர்கள் "பாத்திரம் அகப்படவில்லையே! அரசன் நம்மைச் சும்மா விடமாட்டான். நாம் அவனது தண்டனையினின்றும் தப்புவது எப்படி? வட்டிலைக் களவாடியவன் கடவுள் சொத்தென்பதையும் கவனித்திலனே! அவன் திருட்டுத் தொழிலில் கைதேர்ந்தவன் என்பதற்கு ஐயமில்லை" என்று பலவாறு பிதற்றித் தம் முயற்சி பலியாமல் வாளாவிருந்தனர்.

இச்செய்தி நகரெங்கும் பரவியது. எங்கும் இதைப் பற்றிய பேச்சாகவே யிருந்தது. நகர் முழுதும் ஒரே குழப்பம். ஜனங்கள் தம் மனம் போனபடி பேசிக்கொண்டார்கள். "கடவுள் சொத்தைக் களவாடிய த்ரோஹி நற்கதி பெறான்! அவன் என்றைக்கேனும் ராஜ ஸேவகர் கைகளிற் சிக்கித் தண்டனை அடைவது திண்ணம்" என்றனர் சிலர்.

"பலநாளைய திருடன் ஒருநாள் அகப்படுவான். இன்றில்லாவிட்டாலும் என்றைக்கேனும் கள்வன் வெளிவருவான்" என்றார் சிலர்.

"கோயிற் காரியஸ்தரே இதில் ஸம்பந்தப்பட்டிருக்க வேண்டும். உளவறிந்தவனே அவ்வேலையைச் செய்திருக்கிறான். மற்றையோர்க்கு இவ்வளவு துணிவு உண்டாகாது" என்று விளம்பினர் சிலர்.

"நேரிற் காணாமல் நாம் ஒன்றும் சொல்வதற்கில்லை. திருடந் தெரிந்தவனுக்குப் பதுங்கவுந் தெரிந்திருக்கும். களவைக் கண்டுபிடிப்பது மிகவும் அருமை" என்று கூறினர் சிலர்.

அரசனது பணியாளர் அர்ச்சகரையும் பரிசாரகரையும் அச் சுறுத்திப் பார்த்தும் வட்டிலைப்பற்றிய உண்மை வெளியாகவில்லை. அவர்கள் எடுத்திருந்தாலன்றோ ராஜ தண்டனைக்குப் பயந்து ஓடோடியுஞ் சென்று கவர்ந்த பொருளை அவனிடம் சேர்ப்பித்து அவனது க்ஷமையையும் பெறுவர்?

## 10. ப்ராமணர் ராஜ தண்டனை அடைதல்

தேவதேவியின் வீட்டில் வேலைசெய்துகொண்டிருந்த பணிப்பெண் ஒருத்தி தன் யஜமானியிடம் புதிதாய் ஒரு பொற் பாத்திரம் இருக்கக் கண்டாள். கோயிற் பாத்திரம் களவுபோன செய்தியறிந்த அவ்வேலைக்காரி தேவதேவியினிடம் உள்ள பாத்திரமே கோயில் வட்டிலாயிருத்தல் கூடுமென்று அநுமானித் துணர்ந்து உடனே அரண்மனை உத்யோகஸ்தரிடம் சென்று, "ஐயன்மீர்! நான் தேவதேவி

யென்னும் தாசிக்கு ஊழியம் செய்பவள். அவள் வீட்டில் ஒரு பொற்கிண்ணம் இருக்கக் கண்டேன். நான் அப் பாத்ரத்தை இத்தனை நாட்களாய்ப் பார்த்ததில்லை. இன்று தான் அது என் கண்ணுக்கு எதிர்ப்பட்டது. ஒருகால் கோயில் பாத்திரத்தைக் களவாடி யாரேனும் அதை அவ ளுக்கு அளித்திருக்கலாமென் றெண்ணுகிறேன். நீங்கள் சென்று ஆராய்ந்தால் உண்மை வெளியாகலாம்" என்று விநயமாய் விண்ணப்பித்துக்கொண்டாள். அதைக்கேட்டு அவர்கள் வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்து அவளுக் குப் பரிசளித்தனுப்பித் தேவதேவியின் வீடு நோக்கிச் சென்றனர்.

தேவதேவியின் வீட்டினைக் காவலர் சூழ்ந்துநிற்க உத்யோகஸ்தர் உள்ளே சென்று தேவதேவியை நோக்கி, "தேவதேவீ! உன்னிடம் புதிதாய்க் கிடைத்திருக்கும் பொற் பாத்திரத்தைக் கொண்டுவா" என்றனர். உடனே அவள் பயத்தோடும் சென்று அக் கிண்ணத்தைக் கொணர் ந்து அவர்முன் வைத்தனள்.

அவர்கள் அவளைப் பயமுறுத்தி "நீ இதனை எங்ஙனம் களவாடினாய்?" என்று வினவினர்.

அவள், "யான் ஒரு பாபமும் அறியேன். என்னி டம் வழக்கமாய் வந்துகொண் டிருந்த விப்ரநாராயண னென்னும் ப்ராமணர் அழகிய மணவாள தாஸன் மூலம் அதைக் கொடுத்தனுப்ப நான் அவனிடமிருந்து பெற்றுக் கொண்டேன். அவரை வரவழைத்துக் கேட்டால் மற்ற விஷயங்களும வெளியாகும்" என்றாள்.

உடனே காவலரிற் சிலர் புறப்பட்டு விப்ரநாராயணரை அவ்விடம் கொண்டு வந்து நிறுத்தினர். உத்தியோகஸ்தர்

வேசியையும் விப்ரரையும் அரசவைக்குக் கூட்டிச் சென்றனர். அரசன் அவ்விருவரையும் சினந்து நோக்கி, "இவ் வட்டில் உங்களுக்குக் கிடைத்தது எப்படி?" என்று வினவினான்.

தேவதேவி முன்னர் உத்தியோகஸ்தரிடம் கூறிய படியே மீண்டும் உரைத்தாள். அவள் அவ்வேழைப் பார்ப்பனரைக் காட்டிக் கொடுக்க அரசன் கண்கள் கோபத்தால் சிவந்தன. உதடு துடித்தது. அவன் பற்களை நறநறவென்று கடித்து "ஏ, ப்ராமணா! உன்பிறப்புக்குத் தகாத செய்கைக்கு உன் மனம் எங்ஙனம் இடங்கொடுத்தது? நீ பூண்டிருந்த தவக்கோலத்தை விடுத்து வேசியை அடைந்ததுமன்றி கடவுட் சொத்தைக் களவாடவுந் துணிந்தனையே! உன் தைரியத்தை என்னென்றிகழ்வது?" என்று கடிந்துரைத்தான்.

விப்ரநாராயணர் அரசனை நோக்கி, "அரசே! கடவுள் சாக்ஷியாக நான் ஒன்றும் அறியேன். ஏன் என்மீது இந்த அபாண்டமான பழியைச் சுமத்துகிறீர்கள்? நான் தேவதேவியைக் காதலித்தது உண்மை; ஆயினும் அவளுக்கு நான் அப் பாத்திரத்தைக் கொடுத்து அனுப்பியதாக அவள் கூறுவது முற்றும் பொய்யேயாகும். எனக்குத் தூதனுமில்லை; நான் வட்டிலையும் பார்த்ததில்லை" என்று கூறி முடித்தார்.

இதனால் தேவதேவிக்கும் விப்ரநாராயணருக்கும் பெரிய விவாதம் உண்டாயது. அவர்களுக்குண்டான மனஸ்தாபம் முதிர்ந்தது. ஒருவரை யொருவர் வைது தூஷித்தனர். இவ்விருவர் நடத்தைகளையும் கண்ட அரசன் களவைப்பற்றி ஒருவிதமாயும் தீர்மானிக்கக்கூடாத

வனானான். அவன் தன் மந்திரிகளோடு கலந்து யோசனை செய்தான்.

பின் அவ் வேசியை நோக்கி அரசன், "பெண்ணே! அப் பிராமணன் அப் பாத்திரத்தை அவனது அந்தரங்கனான அழகிய மணவாளனது உதவியாற் கவர்ந்து உனக்குக் கொடுத்தனுப்பியதாக ஏற்படுகிறது. ஆகையால் நீ களவாடிய பொருளைப் பெற்றமைக்குத் தண்டனைக்குள்ளாகவேண்டியவளாகிறாய். நீ செலுத்தவேண்டிய அபராதத்தை வைத்துவிட்டு விடுதலை யடைவாயாக" என்று மொழிந்து ப்ராமணனை நோக்கி, "ப்ராமணா! நீ செய்த குற்றம் ஸாமான்யமானதன்று. களவு பஞ்சமாபாதகங்களுள் ஒன்றாகிறது. நீ கவர்ந்த வட்டிலோ ஸர்வலோக கர்த்தாவாகிய இறைவனுக் குரியதாகும். இதனினும் கொடிய செய்கை வேறொன்றில்லை. களவு செய்ததுமன்றி அதைப்பற்றி 'ஒன்றுமறியேன்' என்று ஸாதிக்கவும் முயன்றனை. ப்ராமணர் வெறுக்கத்தக்க களவு, காமம், பொய் என்னும் முத்தீக்குணங்களும் உன்னிடம் உள்ளன. பகவானிடத்தில் அபசாரப்பட்டவன் கரையேறுவதுண்டோ? அடாது செய்தவன் படாது படுவானாகையால் நீ தண்டனைக் குள்ளாகவேண்டியவனாகிறாய். ஆயினும் நீ செய்த பெரும பிழைக்குத் தக்க தண்டனை இன்னதென்று எனக்கு விளங்கவில்லை. பொன்னைக் களவு செய்வோர்க்குரிய தண்டனையை நீ பெறவேண்டியவன். நூல்வல்லாரைக் கலந்து ஆராய்ந்து உனக்குரிய தண்டனையை விதிக்கும் வரையில் நீ சிறையில் அடைபட்டுக் கிடப்பாய்" என்று கூறினான். உடனே ஏவலாளர் அந்தணரைச் சிறைக்கோட்டத்துக்குக் கூட்டிச் சென்றனர். தேவதேவியும் அபராதப் பணத்தைச் செலுத்திவிட்டு விடுதலை யடைந்தாள்.

## 11. பிராட்டியின் கருணை

ப்ராமணர் தன் விதியை நினைந்து மனங்கலங்கினர். சிறையில் அடைபட்டபின் அவர் தம் நிலைமைக்குப் பெரி தும் துக்கித்தார். தம்மை வெறுத்துக்கொண்டார். ஸத்ய நெறி கடந்து தாம் கேடுற்றதற்கு மிகவும் இரங்கித் துடித் தார். "கருணைக்கடலாகிய எம்பெருமானே! தேவரீருக் குச்செய்து வந்த துளவத்தொண்டைவிட்டதன் பயனாக வன்றோ இந்தத் துன்பம் நேர்ந்தது. இனியேனும் என்னை உன் திருவடிகளில் இடையறாத பக்தியுடையனா கும்படி அருள்புரியலாகாதா? வேசிவீடே கதியெனக் கிடந்த பாவியேன் அல்லல் உற்று அவதிப்படுகின்றேன். நான் விடுபட்டு நல்வாழ்வு வாழ்வது என்றோ? பெண் மோஹம் பெரும்பேதைமைத்து என்னும் ஆன்றோர் ஆணை யைமீறி துயரக்கடலுள் ஆழ்ந்து நிற்கும் எளியேனைக் கைவிடாது காப்பது நின்பொறுப்பே யன்றோ? இழிஞ னுக் கருள்சுரந்து நற்பத மளிப்பது நின் ஸௌலப்யத் திற்கும் தலைமைக்கும் பொருந்துமன்றோ? அடுத்தவர்களை ரக்ஷிக்கும் அருங் குணம் உன்னிடம் இருந்தது பற்றி யன்றோ கஜேந்தரன், ப்ரஹ்லாதன், த்ருவன், மார்க்கண் டேயன் முதலியவர் நின்னையே சரணாகவடைந்து மேன்மை நிலையடைந்தனர். ஸர்வேசா! அடியேனை ஆட்கொண்டு உய்வித்தருள்வது நின் எளிமைக்கு நேர்மைத்தாகும். தேவர், முனிவர், ருஷிகள் முதலிய பெரியோரின் ஹ்ரு தயகமலத்தில் ஸதாவீற்றிருந்து அவர்களுக்கு இன்னருள் புரிவதாலன்றோ உன்னையே முதற்றெய்வமென்று உலகம் போற்றுகின்றது! ஒரு பாபத்தையுமறியாத நான் கள்வ னென்று குற்றஞ்சாட்டப்பட்டு வருந்துவதும் அவ்விலை மாதின் மையலில் மண்டிக்கிடந்ததன் பயனாலன்றோ? துர் ஜன ஸஹவாஸம் துன்பத்தையே பயக்கும் என்பதற்கு

நானே இலக்காகின்றேனே! என் செய்வேன்! கடவுளின் திருவருள் கூடுவது என்று கொலோ?" என்று ப்ரலாபித்தார்.

வேதியரின் ப்ரலாபத்தைத் திருமகள் கேட்டுப் பரிதபித்துத் நம் கொழுநரான பெரிய பெருமாளை நோக்கி, "ஸ்வாமி! அவ்வந்தணரை ஒறுத்ததுபோதும். அவர் பச்சாத்தாபப்பட்டு வருந்துவதை தேவரீர் அறியவில்லையா? ஐயோ பாபம்! அவரைச் சோதித்தது போதும். இனி அவரிடம் கருணைகாட்டி அருள்புரியவேண்டும். மனங்கசிந்து உருகியரற்றும் அவரது எழ்மை நிலையைக் கண்டு ஸஹிக்க என்னுற்கூடவில்லை. அடியாள் பொருட்டேனும் அவரைத் தடுத்தாட்கொள்ளும்படி ப்ரார்த்திக்கிறேன். முன்போல் துளவத்தொண்டு புரிந்து நற்கதிபெறும்படி அவருக் கருள்புரிக" என்று குறையிரந்தாள்.

பக்தர்களிடத்தில் பிராட்டிக் குள்ள கருணைதான் என்னே! அடியவர்கள் பகவானது க்ருபையைப் பெற்று உய்வதற்கு அவள் புரியும் உதவிதான் என்னே! உலகத்துத்தோன்றும் எல்லாவுயிர்களுக்கும் தாயாய் நின்று அவர்க்குற்ற இடரைத்தனதாகப் பாவித்துப் பகவானிடம் பரிந்து நற்கதியளிக்கும் அருமைத் திருக்குணத்தை என்னென்று புகழ்வது?

பெரிய பெருமாளும் பிராட்டியைநோக்கி, "விப்ரநாராயணனைக் காப்பாற்றுவது நமது கடமையே. மண், பெண், பொன் என்னும் மூன்றும் அழியுந் தன்மையன. அவற்றால் ஒருவன் அடைவது துன்பமேயன்றி வேறன்று. பகவானது சரணகமலங்களே பற்றத்தக்கவை. இவ்வுண்மையை நமது பக்தன் அநுபவத்தால் கண்டறியவேண்டுமென்பதே என் நோக்கமாகும். தேவதேவியின் வலையில்

அகப்பட்டதனால் விப்ரநாராயணன் ரக்ஷித்திலேந்தான். அரசதண்டனை அடைந்தபின் தன் நிலையை உள்ளபடி அறிந்து கொண்டான். தன் பிழையை உணர்ந்து உள்ளங்கொதிக்கின்றான். அவனவன் வினையின் பலனை அவனவனே அநுபவத்தாற்கண்டு நலமடைகிறான். அதனால் நான் அவனுக்கு அரசதண்டனை விதிக்கும்படி இல்லாத குற்றத்தை அவன்பேரில் சாட்டவேண்டி யிருந்தது. அவரவர் செல்லும் வழியே விட்டு அல்லல் உண்டாக்கிப் பின் அவ்வழியினின்றும் அவரைத் திருப்புவதே எளிதாகும். நம் அடியவன் தன் கைங்கர்யத்தை விட்டு விலைமாதின் மையலில் சிக்கி அலைந்ததன் பயனைத் தானே அநுபவித்ததனாலல்லவோ அவனுக்கு இப்போது மனக்கசிவும் பச்சாத்தாபமும் உண்டாகின்றன? அவனை ஆட்கொள்வதற்கு இதுவே தகுந்த காலமாகும்'' என்று தம் திருவுள்ளக் கருத்தை வெளியிட்டுப் பிராட்டியின் விருப்பத்திற் கிசைந்தருளினர்.

## 12. அரசன் ப்ராமணரை விடுவித்தல்

உலகங்கள் யாவற்றையும் புரந்தளிக்கும் ஆதிமூர்த்தியாகிய கமலக்கண்ணன் தம் அடியவர் படும் வேதனையைக் காணப்பொறாராய் வேதியர்க்கு நற்பதம் அளிக்கத் திருவுள்ளங் கொண்டார்.

அவ்விரவே பகவான் மன்னன் கனவில் தோன்றி, "வேந்தே! விப்ரநாராயணன் ஒரு பாபத்தையும் அறியான். பொற்கிண்ணத்தைக் கவர்ந்தவன் அவன் அல்லன். விலைமகளிடம் அவன் கொண்ட வேட்கையை அறிந்த நாம் அவ்வடியவனைத் தடுத்தாட்கொள்ளத் திருவுள்ளங்கொண்டு இவ்வுபாயத்தைக் கைக்கொண்

டோம். ஸந்நிதிப்பாத்ரத்தை நாமே எடுத்துச் சென்று வேசிகையிற் கொடுத்தோம். நாமே அழகிய மணவாள தாஸனென்னுந் தூதன்போல் வேஷந்தாங்கி அவ்வேசி பால் சென்றோம். ராஜ தண்டனையே சார்பாக அவன் நற்கதிபெறவேண்டியவனாகையின் அங்ஙனஞ் செய்தோம். அவன் அடையவேண்டிய தண்டனையும் அடைந்தாயிற்று. அவனைச் சிறையினின்று உடனே மீட்டு முன்னர் அவன் எமக்குச் செய்து வந்த திருப்பணியைச் செய்துவருதற்கு வேண்டிய ஸௌகர்யங்களைக் குறைவின்றி முடித்துவை. அந்தத் தாஸியிடம் பெற்றுள்ள தனமும் எமக்குவேண்டியதில்லை'' என்று கட்டளையிட் டருளினர்.

உதய மாயிற்று. அரசன் துயில் நீங்கி எழுந்தவுடன் அந்தணர் அடைபட் டிருந்த காராக்ரஹத்தை அடைந்தான். ப்ராமணர் பகவந்நாம ஸங்கீர்த்தனம் செய்துகொண்டும் தம் தீவினையை நினைந்து நினைந்து மனம் உருகியும் நின்றார். அவர் தூய நிலையைக் கண்ட மன்னவன் வெகு பரபரப்போடும் சென்று அவரது திருவடித் தாமரைகளில் விழுந்து ஸாஷ்டாங்கமும் நிலத்திற்றேயப் பணிந்து கூப்பிய கையுடன் அவரை நோக்கி, "ஸ்வாமி! தேவரீரது மஹிமையைச் சிறிதும் அறியும் திறன் பெறாத புன்மையேன் செய்த அபராதத்தை க்ஷமித்தருள வேண்டும். பாகவதாபசாரத்தால் பெரும் பாவியானேன். அடியேனைப் புனிதனாக்கி யருளல் வேண்டும். தேவரீர் முன் போல் அழகிய மணவாளன் கைங்கர்யத்தைச் செய்து வருக. தேவரீரது திருவடி பலத்தாலும், ஸம்பந்தத்தாலும் இச் சிறைக் கோட்டம் அறச்சாலையாயிற்று. எம்பெருமானையே தூதனாகப் பெற்ற தேவரீரது பெருமையை நினைக்குந்தோறும் எம்முள்ளம் உருகுகின்றது'' என்று அரற்றி உடனே அவர் கை, கால்களி

லிருந்த தளைகளை அவிழ்த்து அவரை விடுவிக்கக் கட்டளையிட்டான்.

விப்ரநாராயணரும் அரசனைக் குளிர நோக்கி யருளி, "அரசனே! யாவும் பகவத் ஸங்கல்பமே யன்றி நம்மாலாவது ஒன்றுமில்லை. வேசி வீடே கதி யெனக் கிடந்த எனக்குக் கடவுள் இத் தண்டனையை உன் மூலமாய் அளித்தார். அதன் பொருட்டு நீ வருந்த வேண்டியதில்லையன்றோ? உன்னால் என் பதி எனக்கு மீண்டும் வரப் பெற்றேன். நான் இனி நல் வாழ்வு வாழ்வதற்கு நீயே ஊன்றுகோல்போ லானாய். உனக்கு நான் என்றும் நன்றியுடையனா யிருக்கக் கடமைப்பட் டிருக்கிறேன். அரசன் கடவுளின் அம்ச மென்று பெரியோர் கூறுவர். கடவுளின் ஆணையை உலகில் நிறுத்துவதற்கே அரசர் ஏற்பட் டிருக்கின்றனர்" என்று கூறி அவனை ஆசிர்வதித்து அவனிடம விடை பெற்றார்.

## 13. விப்ரநாராயணர் திருந்தி நலமடைதல்

வேதியர் தமது பாபச் செயல்களுக்காகப் பெரிதும் இரங்கினார். அவர் பாகவதர் பலரைக் கண்டு "அடியேன் இழைத்த பாபங்களுக்குக் கழுவாய் யாது? பகவத் கிருபைக்குப் பாத்ரனாய் உய்வதெங்ஙனம்? எம் போலியர்க்கு மறை நூல்கள் விதித்திருக்கும் ப்ராயச்சித்தம் இன்னதென்று ஆராய்ந் துரைக்க ப்ரார்த்திக்கிறேன்" என்று வேண்டினார்.

நூல் வல்ல மறையவரும், "விப்ரரே! பாகவதர்களின் ஸ்ரீ பாதங்களைப் புனித நீர் கொண்டு விளக்கி அத் தீர்த்தத்தைப் பருகுவதே எல்லா பாபங்கட்கும் ப்ராயச்சித்தமாகும். பாகவத ஸ்ரீ பாத தீர்த்தமே ஸர்வ பாபங்

களையும் போக்க வல்லது. பாகவதர் பெருமையை இத் தன்மைத்தென்றியம்ப முடியாது" என்று கூறினர்.

அவ்வுரை கேட்டு ப்ராமணரும் தினந்தோறும் பாகவதர்களை ஆராதித்து அவர்களிடம் ஸ்ரீ பாத தீர்த்தம் சேர்த்துக்கொண்டு அதனைப் பருகி "இன்றே யான் பிறவிப் பெரும் பயன் பெற்றேன்! இனி எனக்குக் குறை யாதுமில்லை" என்று மனங் களித்திருந்தார். அவர், "ஸ்ரீமந் நாராயணனே ஸர்வவித பந்து. அவரல்லால் தெய்வமில்லை. அவரிடம் அன்புபூண்டொழுகும் சீரியரின் திருவடிகளைத் தம் சென்னியிற் சூடுவோர் எளிதிற் பரம பதம்பெறுவர்" என்னுந் திடமான கொள்கையுடையராய் விளங்கினர். அவருடைய பாகவத பக்தியையும் சீலத்தையும் கண்டோர் அவருடைய மஹிமையை அறிந்து கொண்டாடினர்கள். அவரும், "பாகவதர்களின் திருவடித் துகளையே அரும்பொருளாகக் கருதி அதனைத் தம் சிரத்தில் சூடியும், அது கலந்த நீரைப் பருகியும் பெருமையடைந்ததனல் தம்மைத் 'தொண்டரடிப்பொடி' என்று அழைத்துக்கொண்டார். அதனல் அவருக்கு அப்பெயரே நிலைத்து நின்றது.

ஸ்ரீ ரங்கநாதன் தமது பக்தரான தொண்டரடிப் பொடியாழ்வார் திருந்திநலமடைந்து முன் போல் துளவத் தொண்டில் தம் காலத்தைக் கழித்துப் பரம பாகவதராய் விளங்குவதைக் கண்டு களித்து அவருக்கு ஸேவை சாதித்தருளினர். பின் ஆழ்வார் பகவானின் ஐவகை நிலைகளையும் ஸேவித்து நலமடைய விரும்பினர். பரந்தாமனும் ஆழ்வாரின் திருவுள்ளத்திற்கு இரங்கி அங்ஙனமே தன் பெருமைகளைக் காட்டியருள தொண்டரடிப் பொடியாழ்வார் பகவானை ஸேவித்து ஆனந்தத்தில் மூழ்கி

இன்புற்றிருந்தார். ஐவகை நிலைகளுள்ளும் அர்ச்சையிலேயே அவர் மனம் ஈடுபட்டு நின்றது. பெரியபெருமாளையன்றி அவர் பிறிதொன்றையறிந்தவரல்லர்.

ஆழ்வாரின் ப்ரதாபத்தைக் கண்டாரும், கேட்டாரும் அவருடைய ஒழுக்கத்தையும், சீலத்தையுங் கண்டு வியப்புற்றனர்.

தேவதேவியும் ஆழ்வாரைப்போல் திருந்திநலமடைய விரும்பினாள். அவள் தன் ஸொத்தைப் பெரியபெருமாளுக்கேயுரிமையாக்கி தவக் கோலம் பூண்டு பாகவதர்களைப் புகலிடமாக வடைந்து தன் வாழ் நாளை பகவத் பாகவத கைங்கர்யத்தில் கழித்து நற்கதி பெற்றாள். பூவினைச் சேர்ந்த நாரும் மணம் பெறும் என்னும் முதுமொழிக்கிணங்க தேவதேவியும் ஆழ்வாரின் திருவடி ஸம்பந்தம் பெற்றமையால் வைகுந்தம் பெற்றுப் பிறவி யறுத்தாள். பெரியோரிணக்கம் வீண் போகாதன்றோ?

ஆழ்வார் பாகவதர் பெருமையையும், பகவானின் ஸௌலப்யத்தையும், தமது இழிமையையும், தாம் பெற்ற பகவதநுபவத்தையும் உலகினர்க்கு அறிவித்து அவர்களை உய்விக்கத் திருவுள்ளங் கொண்டு 'திருமாலை' 'திருப்பள்ளியெழுச்சி' என்னும் திவ்ய ப்ரபந்தங்களை அருளிச் செய்தார். பெரியபெருமானே செவி சாய்த்துக் கேட்டு அருள் சுரக்கத் தாமே சொல்வோனாக நின்று தம் குறைகளை விண்ணப்பித்துத் 'திருமாலை' பாடி சாத்தியருளினார். திருமாலையி லுள்ள பாசுரங்களைத் தினந்தோறும் அநுஸந்தானம் செய்பவன் பகவானுடைய அநுக்ரஹத்தையும், பாகவதரின் தொடர்பையும் பெற்று எல்லா ஸுகங்களுடனும் விளங்குவா னென்பது திண்ணம். திருமாலையை மனப் பாடம் பண்ணிக் காலையும், மாலையும ந்பாநம்

செய்வது மேன்மையைத் தரும். திருமாலைப் பாடல்கள் கல்லும் கரைந் துருகுந் தன்மையில் பாடப் பெற்றுள்ளன. பொருட் செறிவும் சொற்சுவையும் மிகுதியாக வுடைய ஆழ்வாரின் ப்ரபந்தங்களைக் கொண்டாடாதவர் ஒருவருமிலர்.

இங்ஙனம் உலகத்தாரை வாழ்வித்து ஆழ்வார் தம் வாணாள் முழுதும் ஸ்ரீ ரங்க க்ஷேத்ரத்திலேயே கழித்து முடிவில் அந்தமில் இன்பத்துக் கேதுவான பரமபத வீட்டினைப் பெற்று கிருதார்த்தரானார்.

பச்சைமா மலைபோல்மேனி பவளவாய் கமலச்செங்கண்
அச்சுதா! அமரரேறே! ஆயர்தம் கொழுந்தேயென்னும்
இச்சுவைதவிர யான்போ யிந்திரலோக மாளும்
அச்சுவைபெறினும் வேண்டேன் அரங்கமா நகருளானே,

வேதநூல் பிராயம்நூறு மனிதர்தாம் புகுவரேனும்
பாதியும் உறங்கிப்போகும் நின்றதில் பதினையாண்டு
பேதைபா லகனதாகும் பிணிபசி மூப்புத்துன்பம்
ஆதலால் பிறவிவேண்டேன் அரங்கமா நகருளானே.

Printed at he 'Caxton Press,' Madras — 1925. (A)